**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: **25.10.2025**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
## தரமான விதை உற்பத்தியாளர் பயிற்சி

கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை, விதை மையம் மூலம் தமிழக அரசின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் "நீங்களும் ஆகலாம் தரமான விதை உற்பத்தியாளர்'' என்ற தலைப்பில் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இந்த பயிற்சியில் பங்கேற்க ஆர்வம் உள்ள இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். முன்பதிவு இன்று முதல் வரும் **27.10.2025** தேதிக்குள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை பேராசிரியரை நேரிலோ அல்லது **9952176477** என்ற கைபேசி எண் மூலம் அணுகி பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். மாவட்டத்தில் மொத்தம் **25** பேருக்கு இந்த பயிற்சி வாய்ப்பு வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு **26** நாட்கள் பயிற்சி தரப்படும்.

இந்த பயிற்சியின் போது, விதை உற்பத்தியாளராக தேவையான அனைத்து விவரங்களுமான விதைத் தேர்வு, சுத்திகரிப்பு, பயிர் பராமரிப்பு முறைகள், சான்றிதழ் பெறும் நடைமுறைகள், விதை சேமிப்பு மற்றும் விற்பனை வழிமுறைகள் வழங்கப்படும். பயிற்சியில் பங்கேற்பதற்கு **18** முதல் **35** வயதிற்கு உள்ள இளைஞர்கள் மற்றும் விவசாயிகளுக்கு அழைப்பு விடப்படுகின்றது. பயிற்சி முடிவில் பங்கேற்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். இந்த அரிய வாய்பை பயன்படுத்திக் கொண்டு தரமான விதை உற்பத்தி செய்யும் திறமையை வளர்த்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை, தொடர்பு கொள்ளலாம்.

**குறிப்பு : ஆதார் அட்டை நகலை எடுத்து வரவும்**

**மக்கள் தொடர்பு அலுவலர்**